சுரண்டை நகரம்

தென்னை ஓலைகளில்
வழுக்கி விளையாடும்
கூற்றால தென்றல் காற்று.

திசையெங்கும் வீதியில்
அழுக்கில் விளையாடும்
சிறுவர்கள்

அருள் செய்யும்
அழகு பார்வதிக்கும்
முக்தி தரும்
முப்பிடாதி அம்மனுக்கும்
எட்டு திசை காக்கும்
மாட தெய்வங்களுக்கும்
இஸ்ரலேின் இளைஞனை
வணங்கும் தேவாலயங்களிலும்
அரபேியத்தின் மசூதிகளிலும்
வருடம் முழுவதும் நடபெறும்
திருவிழாக்கள்.

பரணி ஆற்றில் வளர்ந்த நாகரிகம்
நாங்க பாண்டியரரோட பரம்பரை தான்.
தரணி எங்கு சென்று வந்தாலும்
நாங்க மீற மாட்டோம் எங்க வரை முறதைான்.
இந்த ஊரின் மைந்தன்
தென்காசி MLA ஆனாரு இருமுறதைான்.

சுரண்டை சுத்தி எல்லா இடத்திலும்
சுரண்டை மண்வாசனை வீசுமே.
இங்க பிறந்த குழந்தை கூட
வால போல- னு பேசுமே...

கூற்றால கூரங்கு போல இலந்தை
காளத்து ஆலங்கிளையில்
குழந்தைகள் ஆடும் ஊஞ்சல் .

தண்ணீர் கிணற்றில் எல்லாம்
தலகீழாக தாவும் டவுசர் போட்ட
தவளைகள்..

சாதாரண மக்கள் வாழும் இந்நகரம்..
உழைக்கும் மக்கள் வாழும இந்நகரம்..
எல்லா வணிகமும் செய்யும் தொழில் நகரம்..
மதுக்கடை இல்லாத ஒரு நகரம்..
காய்கறி சந்தையால் வளர்ந்த பரொநகரம்..

சுற்றி வயல்கள் சூழ்ந்த அழகும்
கரமவீரரால் வந்த ஆழ்ந்த அறிவும்
வியர்வை சிந்தி வாழும் விவசாயிகளும்
மனதை மயக்கும் மங்கைகளும்
அன்பை அளவில்லாமல் சுரக்கும்
எங்க சுரண்டை நகரம்.....

அழகான கவிதை என்ன எழுதுவது
அழகான கவிதையாகவே
இருக்கும் சுரண்டைக்கு ....। .

-கனஷ்முருகன்